உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இதுபோன்று நடந்துகொண்டால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுத்தான் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, அப்படி பெயர் இடம்பெற்றிருந்தால் எடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைத் தலைவரை அப்படியெல்லாம் நிர்ப்பந்திக்க முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை நீங்கள் அப்படியெல்லாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்

(முற்பகல் 11-00

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

115—

விளையாட்டு அரங்கம்

***29278—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியில் பத்து கல்லூரிகளும், 40 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அதில் சுமார் 60,000 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். பிற தடகளப் போட்டிகள் மற்றும் குழுப் போட்டிகளான கால் பந்து, வாலிபால், கைப் பந்து, வளைகோல் பந்து, கூடைப் பந்து, கோ-கோ மற்றும் கபடி போன்ற விளையாட்டுகளை விளையாட வேண்டுமென்று சொன்னால், கும்பகோணத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தூரமுள்ள தஞ்சாவூருக்கும், மயிலாடுதுறைக்கும், திருவாரூக்கும் செல்ல வேண்டியிருக்கின்றது. மண்டல விளையாட்டுப் போட்டிகள் என்றால் 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றது.*

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தின் மத்தியப் பகுதியில் கும்பகோணம் அமைந்துள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட விளையாட்டு அரங்கம் ஒன்றை கும்பகோணத்தில் அமைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் மக்களுடைய தேவைகளை அறிந்து, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் மக்களுக்காகச் சிறப்பான முறையில் பணியாற்றி வந்து கொண்டிருப்பதை தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கின்றார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாசியோடும் வழிகாட்டுதலோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு மாவட்டத் தலைநகரங்களில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம், தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, கபடி, கையுந்துப் பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளை உள்ளடக்கி, விளையாட்டு அரங்கத்தை அமைத்து வருகின்றது. மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு வசதியை ஏற்படுத்தியபின், மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கிட விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திட்டமிட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைநகரமாக தஞ்சாவூர் விளங்கிக்கொண்டிருக்கின்றது. தஞ்சாவூரில் திறந்தவெளி அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது என்றாலும், கும்பகோணம் மாவட்டத்தின் தலைநகரம் அல்ல. ஆதலால், மாவட்டத்தின் விளையாட்டு அரங்கத்தை கும்பகோணத்தில் அமைத்திட வாய்ப்புகள் இல்லை. மேலும், கும்பகோணத்தில் விளையாட்டு வசதிக்காக, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இடமில்லை. ஆணையத்திற்கு விளையாடும் இடத்தை மாற்றம் செய்தால் அல்லது ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தால், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலோடு மதிப்பீடு மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைமைக்கேற்ப கும்பகோணத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

[2015 ஏப்ரல் 1

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் திருக்கோயில்கள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். கும்பகோணம் வளர்ந்து வருகின்ற வணிக நகரமாக உள்ளது. மேலும், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டத் தலைமை மருத்துவமனை, மாவட்ட கால்நடை மருத்துவமனை, மாவட்ட பதிவுத் துறை அலுவலகம், மண்டலப் போக்குவரத்து அலுவலகம், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, காரைக்குடி, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தினுடைய தலைமையிடம், என பல்வேறு மத்திய, மாநில அரசுகளின் துறைத் தலைமையிடமாகக் கும்பகோணம் உள்ளது. வரும் ஆண்டுகளில் கும்பகோணத்தைத் தலைமையிடமாகவும், தனி மாவட்டமாகக்கூடிய அந்தஸ்து பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகள் நிறைந்த ஊர் கும்பகோணம். இளைஞர்கள், தங்களது விளையாட்டுப் போட்டித் திறமையை வளர்த்துக்கொள்ளவும், மாணவ-மாணவிகள் அகில இந்திய அளவில் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்குப் பயிற்சிக் களமாகப் பயன்படும் வகையில் அது அமைய வேண்டும். மேலும், பல ஆண்டுகளாக மாவட்டத்தின் தடகளச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறேன். பல்வேறு புதிய வீரர்களை உருவாக்கியிருக்கின்றோம். இந்த நிலையில் வர இருக்கிற 2016 ஆம் ஆண்டு கும்பகோணம் மகாமகம் பெருவிழாவினை நினைவூட்டும் வகையில், சிறப்பினமாகக் கருதி, கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 ஏப்ரல் 1]

முற்பகல் 11-05

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிமுறைகளின்படி மாவட்டத்தின் தலைநகரங்களில்தான், மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மத்தியில் அமைந்திருக்கின்றது; பத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன; நாற்பதுக்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 30,000 மாணவ/மாணவியர்கள் இருக்கின்றார்கள். குழுப் போட்டிகளுக்குச் சிறந்த இடமாக அமைந்திருக்கின்றது. 40 கிலோ மீட்டர் தஞ்சாவூருக்கு தள்ளியிருக்கின்றது. இது கோயில்கள் நிறைந்த நகரமாக இருக்கிறது என்றார். கோயில் நிறைந்த நகரத்திற்கும் விளையாட்டிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ளதால் மட்டுமே ஒரு மாவட்டத்தின் தலைநகரத்தில் அமைக்கப்படும் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. வீரர்கள் நிறைந்த இடமாக இருந்தால் கட்டாயம் விளையாட்டுத் துறையின் மூலமாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மகாமகம் போன்ற திருவிழாக்கள் நடக்கின்றபோது, விளையாட்டு வீரர்களுக்கும் மகாமகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Common Wealth போட்டியில் பங்கு கொண்டு வேலூரைச் சேர்ந்தவர் சிறப்பான முறையில் தங்கப் பதக்கம் வென்றதை மாண்புமிகு அம்மா அவர்கள் பாராட்டி, ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் அங்கே விளையாட்டிற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, விளையாட்டு வீரர்கள் வரக்கூடிய காலங்களில், தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் போன்றவற்றை தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குகொண்டு சிறப்பான முறையில் வெற்றி பெற்றால் கட்டாயம் துறைரீதியாக ஆய்வு செய்து விளையாட்டு வீரர்களுக்கான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.